# கொத்தனார்களுக்கான ஒரு நாள் பயிற்சி

## நிகழ்ச்சிநிரல்

நவம்பர் 18, 2016

TECHNICAL SUPPORT UNIT:

iihs™
INDIAN INSTITUTE FOR HUMAN SETTLEMENTS

IN ASSOCIATION WITH:

Gramalaya

Keystone

CDD Consortium for DEWATS Dissemination Society

# கொத்தனார்களுக்கான பயிற்சி: ஒரு நாள் நிகழ்ச்சி

## முன்னுரை:

நகர்ப்புற சுகாதாரத்தில் குறிப்பாக அந்தந்த பகுதிகளில் கழிவுகளைக் கையாளும் அமைப்புகளை உருவாக்குவதில் கொத்தனார்களின் பங்கு மிகமுக்கியமானது. அந்தந்த பகுதிகளில் கழிவுகளை கையாளும் அமைப்புகளை கட்டுவதற்கு கொத்தனார்களின் திறன்களை மேம்படுத்துவதால் சுகாதாரபணிகள் மேம்படுவதோடு தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரதிட்டத்தில் மிகநல்ல விளைவுகளை ஏற்படுத்த முடியும்.

இந்த ஒருநாள் பயிற்சியானது தற்போது அந்தந்த பகுதியில் கழிவுகளைக் கையாளும் அமைப்புகளான இரண்டு உறிஞ்சு குழி மற்றும் செரிமானதொட்டி / செப்டிக் டேங்க் கட்டுவதில் ஈடுபட்டுள்ள கொத்தனார்களை கவனத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கொத்தனார்கள் இரண்டு உறிஞ்சு குழி மற்றும் செரிமானதொட்டி / செப்டிக் டேங்க் கட்டுமானத்திற்கான சரியான வடிவமைப்பு மற்றும் கட்டும் வழிமுறைகள் முதலியவற்றைப்பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்வதோடு தற்போதையகட்டுமானங்களில் உள்ள குறைபாடுகளையும் உணர்ந்து கொள்வார்கள்.

இந்த பயிற்சி இரண்டு உறிஞ்சு குழி மற்றும் செப்டிக் டாங்க் கட்டுவதில் கொத்தனார்கள் சந்திக்கும் சவால்களை மையப்படுத்துவதாக அமைந்துள்ளது. இதன் மூலம் கொத்தனார்கள் தற்போது செயல்படுத்திவரும் கட்டுமானமுறை மற்றும் வரைமுறைப்படுத்தப்பட்ட கட்டுமான முறை ஆகியவற்றிலுள்ள வேறுபாடுகளை உணர்ந்துகொள்வார்கள். நேரிடையாக செயல்படுத்தும் கட்டுமான முறைகள் மற்றும் செயல்படுத்தும் போது பொதுவாக நேரக்கூடிய தவறுகள் ஆகியவற்றை புரிந்து கொண்டு சிறந்த முறையில் கட்டுமானம் செய்யத் தேவையான திறன்களை பெற்றிருப்பார்கள்.

**பயிற்சிபெறுவோர்:** கொத்தனார்கள்

## பயிற்சியில் கற்றுக்கொள்ளக்கூடியவை:

இந்த ஒரு நாள் பயிற்சியின் முடிவில் கொத்தனார்களால் கீழ்க்கண்ட திறன்களை பெற்றுக்கொள்ள முடியும்:

1. செரிமானதொட்டி / செப்டிக் டேங்க் மற்றும் இரண்டு உறிஞ்சு குழி கழிப்பறை கட்டுமானத்திற்கான சரியான வடிவமைப்பு மற்றும் கட்டும் வழிமுறைகள் முதலியவற்றில் நல்லதேர்ச்சி

2. தற்போதைய கட்டுமானத்தில் உள்ளபிரச்சனைகள் மற்றும் இடர்பாடுகளை நன்கு புரிந்துகொள்ளுதல்

## பொருளடக்கம்:

இந்தஒருநாள் பயிற்சியில் கீழ்க்கண்டவைஅடங்கும்:

- செரிமானதொட்டி / செப்டிக் டேங்க்: அடிப்படை வடிவமைப்பு மற்றும் கட்டுமான வழிமுறைகள். (செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவைஆகியவற்றையும் சேர்த்து)
- இரண்டு உறிஞ்சு குழி : அடிப்படை வடிவமைப்பு மற்றும் கட்டுமான வழிமுறைகள். (செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை ஆகியவற்றையும் சேர்த்து)
- சுகாதாரத்தின் முக்கியத்துவம். கொத்தனார் செய்யும் பணியின் முக்கியத்துவம் மற்றும் அவர்களின் பங்கு

- தற்போதைய கட்டுமானத்தில் உள்ள பிரச்சனைகள் மற்றும் இடர்பாடுகள்

பயிற்சியில் விரிவுரை மற்றும் செய்முறை களப்பயிற்சி ஆகிய உத்திகள் பயன்படுத்தப்படும்

## நிகழ்ச்சிநிரல்:

| நேரம் | காலஅளவு | தலைப்பு |
|---|---|---|
| **காலை 9.00 மணி** | **30 நிமிடங்கள்** | அறிமுகம் மற்றும் பங்கேற்பாளர் பதிவு |
| **காலை 9.30 மணி** | **60 நிமிடங்கள்** | செரிமான தொட்டி / செப்டிக் டேங்க்: அடிப்படை வடிவமைப்பு மற்றும் கட்டுமான வழிமுறைகள். (செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை) திரு. முத்துக்குமாரசாமி) |
| **காலை 10.30 மணி** | **15 நிமிடங்கள்** | தேனீர் இடைவேளை |
| **காலை 10.45 மணி** | **60 நிமிடங்கள்** | இரண்டு உறிஞ்சு குழி: அடிப்படை வடிவமைப்பு மற்றும் கட்டுமான வழிமுறைகள். (செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை) |
| **காலை 11.45 மணி** | **45 நிமிடங்கள்** | **கலந்துரையாடல்**: வடிவமைப்பு அளவுகளின் முக்கியத்துவம் - தற்போதைய கட்டுமான முறைகள் மற்றும் அவற்றிலுள்ள பிரச்சனைகள் (திரு. முத்துக்குமாரசாமி) |
| **மதியம் 12.30 மணி** | **30 நிமிடங்கள்** | சுகாதாரம் மற்றும் கொத்தனார் செய்யும் பணியின் முக்கியத்துவம் (திரு. முத்துக்குமாரசாமி) |
| **மதியம் 1.00 மணி** | **1 மணிநேரம்** | மதிய உணவு இடைவேளை |
| **மதியம் 2.00 மணி** | **3 மணிநேரம்** | செயல்முறை: செரிமான தொட்டி / செப்டிக் டேங்க் மற்றும் இரண்டு உறிஞ்சு குழி கட்டுதல் (திரு. முத்துக்குமாரசாமி) |